**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.84/2025

Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : திவாகர் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : மயில்வாகனன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தேவகுறிச்சி கிராமத்தில் குடியிருந்து தற்போது கூலிவேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும். அசா.1 எனது அண்ணன் ஆவார். கடந்த 8 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நானும், அசா.1 ம் பொதிக்குளம் விலக்கு ரோடு அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது தெருவில் சுமார் 10, 15 நபர்களுக்கு மேல் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது நாங்கள் என்னவென்று சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் நாங்கள் கீழே விழுந்து எங்களுக்கு காயம் ஏற்பட்டது. அதனால் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றோம். போலிசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில்

குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) கடந்த 08.03.2025ம் தேதி இரவு 07.30 மணியளவில் மேற்படி முதல்விசாரணையில் கூறிய சம்பவ இடத்தில் நானும், அசா.1ம் பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியானவர் குடும்ப பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எங்களை பார்த்து ஆபாச வார்த்தைகளால் பேசி அவர் கையில் மறைத்து வைத்திருந்த உருட்டுக்கட்டையால் என்னையும், அசா.1யையும் தாக்கி காயம் ஏற்படுத்தினார் என்றாலும், எங்கள் சத்தம்கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வருவதை பார்த்த ஆஜர் எதிரியானவர் கொலைமிரட்டல் விடுத்துவிட்டு சென்றதாக போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரி உறவினர் என்பதால் அவருடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.84/2025

Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : அபிமன்னன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : பாண்டி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தேவர்குறிச்சி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் அசா.1 மற்றும் எதிரியை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். அவர்களிடையே என்ன பிரச்சனை என்பது எல்லாம் எனக்கு தெரியாது. நான் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டையை விலக்கியதாகவும், எதிரிகள் அசா.1 மற்றும் அசா.2 யை ஆபாசமாக பேசி அவர்களை தாக்கி அவர்களுக்கு காயம்

ஏற்படுத்தியதையும், அவர்களை கொலைமிரட்டல் விடுத்ததையும் பார்த்து தெரிந்துகொண்டு போலிசார் விசாரித்தபோது கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

CC.No.84/2025
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : செந்தில்குமார் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : சேதுராமன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது இளஞ்செம்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பாண்டி அவர்கள் பணிமாறுதலாகிவிட்டதாலும், அவர் என்னுடன் காவல்நிலையத்தில் பணிபுரிந்த காரணத்தினால் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்கள் அடிப்படையிலும் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.03.2025 ம் தேதி மதியம் 13.40 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பாண்டி இளஞ்செம்பூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது தேவர்குறிச்சி கிராமத்தை சேர்ந்த கார்த்திமுருகன், த.பெ.கதிரேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.19/2025 பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** அவர் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனியசாமி மற்றும் அஜித்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை

மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** அன்றைய தினமே பட்டியல் சாட்சிகளான கார்த்திமுருகன், திவாகர், அபிமன்னன், நாகநாதன், மயில்வாகனன், முனியசாமி மற்றும் அஜித்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும் எதிரியை தேடிவந்த நிலையில் 09.03.2025 ம் தேதி 22.50 மணிக்கு முனியன்கோவில் விலக்கு அருகே உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி கைது செய்து 23.00 மணிக்கு பாராகாவல் வசம் ஒப்படைத்துள்ளார். இரவு நேரமாக இருந்ததால் 10.03.2025 ம் தேதி தக்க வழிக்காவல் மூலம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்டுபத்தியுள்ளார்.

**4)** இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 மற்றும் அசா.2 க்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.சண்முகப்பிரியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி மருத்துவர் அவர்கள் அசா.1 மற்றும் அசா.2 க்கு ஏற்பட்ட காயங்களை குறித்து கருத்து கூறஇயலாது என்று சான்று வழங்கியதையும் பெற்றுள்ளார். **அசா.1 க்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அசா.ஆ.6 ஆகவும், அசா.2 க்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அசா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**5)** அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

வாதி கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.